**செய்தி வெளியீடு எண்: 845** **நாள்: 28.11.2019**

**இன்று (28.11.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இராணிப்பேட்டையில் நடைபெற்ற விழாவில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டத்தினைத் தொடங்கி வைத்து, முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராணிப்பேட்டைப் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் வகையில் இன்று 36வது மாவட்டமாக உருவாகும் இராணிப்பேட்டை மாவட்ட துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

“நமது சமுதாயத்தின் அனைத்துப் பகுதி மக்களும் நல்லிணக்கமான முறையில் சீரான முன்னேற்றம் பெற உத்தரவாதம் தரப்பட வேண்டும். மக்களின் நல்வாழ்வையே இலக்காகக் கொண்டு நிர்வாக இயந்திரம் இயங்க வேண்டும். இதுவே எங்களுடைய அரசியல் சமுதாயத் தத்துவமாகும்” என்றார் பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் எங்கள் அரசும் மக்கள் நலனுக்காக செயல்படும் அரசு ஆகும். மக்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்றும், அரசின் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு விரைவாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

அவற்றில் ஒன்றுதான் பெரிய மாவட்டங்களை பிரித்து, புதிய மாவட்டங்களை உருவாக்குவதாகும். சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது, ராணிப்பேட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தேன்.

'மக்களால் நான், மக்களுக்காகவே நான்,' என்று முழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். "மக்களை நாடிச் செல்கின்ற அரசுதான் மாண்புமிகு அம்மாவின் அரசு". அந்த வகையில், இப்பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற, மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களை நாடி வந்திருக்கிறது.

கடந்த சுதந்திர தின உரையில், இராணிப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் ஏற்படுத்தப்படும் என்ற ஒரு அறிவிப்பினை நான் வெளியிட்டேன். அந்த அறிவிப்பு இப்போது செயல்வடிவமாகி உங்களையும், என்னையும் மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறது.

இங்குள்ள சோளிங்கர் நகரில் புகழ்பெற்ற யோக நரசிம்மர் ஆலயம் உள்ளது. யோகத்திலிருந்து நரசிம்மர் கண் விழிக்கும் மாதமான கார்த்திகை மாதத்தில், இந்த மாவட்ட தொடக்க விழா நடைபெறுவது, விழித்த நிலையில் இருக்கும் நரசிம்மரை தரிசிக்க வருகை தரும் பக்தர்களுக்கு மட்டுமல்ல, இந்த மாவட்டத்திற்கே ஒரு யோகமாக நாள் என்று நான் கருதுகிறேன்.

இந்த இனிய நேரத்தில், இந்த புதிய மாவட்டத்தோடு தொடர்புடைய சில வரலாற்று நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்டுவது சிறப்பானதாக அமையும் என்று நினைக்கிறேன்.

செஞ்சிக்கோட்டை மீது ஆற்காடு நவாபுகள் நடத்திய படையெடுப்பில், ராஜா தேசிங்கு வீரமரணம் அடைந்தார். அப்போதைய வழக்கப்படி அவரது இறுதிச் சடங்கின்போது, தேசிங்கு ராஜாவின் மனைவி உடன்கட்டை ஏறினார். இந்த நிகழ்வால் பாதிக்கப்பட்ட ஆற்காடு நவாப் சதாத்துல்லா கான், ராணியின் தியாகத்தை

நினைவுகூரும் வகையில், ஆற்காட்டின் மறுகரையில் இராணிப்பேட்டை என்ற நகரை உருவாக்கினான் என்றும், இராணிப்பேட்டை அருகில் 9 லட்சம் பயன் தரும் பழ மரங்களை நட்டு நவ்லாக் எனும் பகுதி உருவாக்கப்பட்டது என்பதும் வரலாறு ஆகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில் இராணிப்பேட்டை ராணுவப் பேட்டையாகவும் திகழ்ந்திருக்கிறது. இதற்குச் சான்றாக இன்றும் ராணிப்பேட்டையில் பல கட்டடங்கள் காட்சியளிக்கின்றன. ஆங்கிலேயர்களின் ராணுவத்தில் இடம் பெற்றிருந்த பெரிய குதிரைப் படை இந்த ராணிப்பேட்டையில் தான் நிறுத்தப்பட்டிருந்தது. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர் காலங்களில் சென்னை மற்றும் பெங்களூரில் இருந்த ராணுவத்திற்கு உதவியாக மிகப் பெரிய ராணுவம் இங்கே நிலை நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், ராணுவத்தினர் சென்னையில் இருந்து பெங்களூருக்கும், பெங்களூரிலிருந்து சென்னைக்கும் செல்லும் போது இங்குதான் கூடாரம் அமைத்து, தங்கும் இடமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

1856–ஆம் ஆண்டு சென்னை ராயபுரத்திலிருந்து வாலாஜா வரை அமைக்கப் பெற்ற ரயில் பாதை தான், தென்னிந்தியாவின் முதல் ரயில் போக்குவரத்தாகவும், இந்தியாவின் இரண்டாவது ரயில் போக்குவரத்தாகவும் வரலாற்றில் பதிவாகி இருக்கிறது. தற்போது இந்த மாவட்டத்தில் உள்ள வாலாஜா தான் தமிழ்நாட்டின் முதல் நகராட்சியாகும். மாநிலத்தில் மிகப்பெரிய நவலாக் தென்னைப் பண்ணை, புகழ்பெற்ற கால்நடை நோய்த்தடுப்பு மருந்து ஆராய்ச்சி மையம் ஆகியவை இராணிப்பேட்டைக்குப் பெருமை சேர்க்கின்றன. இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட இராணிப்பேட்டைக்கு, இன்று இன்னொரு சிறப்பும் சேர்கிறது. அது என்னவென்றால், இன்றிலிருந்து இராணிப்பேட்டை தமிழ்நாட்டின் 36வது மாவட்டம் என்ற புகழை அடைந்திருக்கிறது.

இந்த இனிய வேளையில், புதிய இராணிப்பேட்டை மாவட்டத்தின் நிர்வாக அமைப்புகளை குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். இம்மாவட்டத்தின் தலைநகராக இராணிப்பேட்டை நகரம் விளங்கும். மாவட்டத்தின் பரப்பளவு 2,234 சதுர கிலோ மீட்டர். மாவட்டத்தின் மக்கள் தொகை 12 லட்சத்து

10 ஆயிரத்து 277 ஆகும். மாவட்டத்தின் வருவாய்க் கோட்டங்கள் இராணிப்பேட்டை மற்றும் அரக்கோணம்

அரக்கோணத்தில் புதிய வருவாய்க் கோட்டம் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் போது நான் அறிவித்தேன், இப்பொழுது அதை நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். வாலாஜா, ஆற்காடு, நெமிலி, அரக்கோணம் ஆகிய வட்டங்களும், 18 உள் வட்டங்களும், 330 வருவாய் கிராமங்களும் உள்ளன. அரக்கோணம், காவேரிப்பாக்கம், நெமிலி, ஆற்காடு, திமிரி, சோளிங்கர் மற்றும் வாலாஜா ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்கள் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. ஆற்காடு, சோளிங்கர், அரக்கோணம், மேல் விஷாரம், இராணிப்பேட்டை ஆகிய நகராட்சிகளும், அம்மூர், கலவை உட்பட 9 பேரூராட்சிகளும், 288 கிராம ஊராட்சிகளும் இந்த மாவட்டத்தில் உள்ளடங்கியுள்ளன.

அந்நியச் செலாவணியை அதிகம் ஈட்டிக் கொடுக்கும் மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் திகழ்கிறது. இது முழுக்க, முழுக்க தொழில் நகரம் என்றால் மிகப் பொருத்தமாக இருக்கும். மத்திய அரசின் 'மகாரத்னா' அந்தஸ்து பெற்ற பெல் தொழிற்சாலை மற்றும் அதைச் சார்ந்த 500க்கும் மேற்பட்ட குறு, சிறு தொழிற்சாலைகள், நூறாண்டு புகழ் வாய்ந்த "பாரி" (Parry) பீங்கான் தொழிற்சாலை, சாமே டிராக்டர் தொழிற்சாலை, சிப்காட் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டை, தோல் மற்றும் ரசாயன தொழிற்சாலைகள் என ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும், வேலைவாய்ப்புகள் கொடுக்கும் மாவட்டமாக இந்த இராணிப்பேட்டை மாவட்டம் திகழ்கிறது.

அறுகோணம் என்று முற்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த இப்பெயர் அரக்கோணம் என்று மருவிவிட்டதாகக் கூறுவர். சென்னைக்கு அடுத்த முக்கிய ரயில்வே சந்திப்பு அரக்கோணத்தில் உள்ளது. தெற்கு ஆசியாவிலேயே மிக நீளமான ஓடுபாதை கொண்ட கடற்படை விமான தளம் ஐ.என்.எஸ். ராஜாளி அரக்கோணத்தில் அமைந்துள்ளது. இவற்றைத் தவிர மேலும் பல சிறப்புகளை இம்மாவட்டம் பெற்றுள்ளது.

இன்னும் பல சிறப்புகளை எதிர்காலத்தில் பெறவுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

தொழில் துறையில் ஒரு முன்னோடி மாவட்டமாக விளங்கும் இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரை மாண்புமிகு அம்மாவின் அரசு செய்த சாதனைகள் சிலவற்றை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

கடந்த 2011 முதல் 2018 வரை 1,106 கி.மீ. நீளச் சாலைகள், 9 பாலப் பணிகள் 568 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 221 கி.மீ. நீள சாலைகள் மற்றும் 6 பாலப் பணிகள் 515 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

37 புதிய பள்ளிக் கட்டடங்கள் 48.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. நெமிலி, இராணிப்பேட்டை பகுதிகளில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் 2.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் 14 புதிய கால்நடை மருந்தகங்கள் 3.78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 69 ஏரிகள் 17.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புனரமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று நீர் வள ஆதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, குடிமராமத்து திட்டத்தின் மூலமாக 70 ஏரிகள் 12.43 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 10.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 8 ஆண்டுகளில் இப்பொழுது புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்டத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் 81,362 பயனாளிகளுக்கு ஏறக்குறைய 99.44 கோடி ரூபாய் செலவில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த 8 ஆண்டுகளில் 28 பள்ளிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு, மாணாக்கர்கள் கல்வி பயில வழிவகை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வாலாஜாவில் உள்ள அறிஞர் அண்ணா அரசு பெண்கள் கலைக் கல்லூரிக்கு 8.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. அரக்கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உயர்வகுப்பு கட்டடம் 7.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள சோளிங்கர், காவேரிப்பாக்கம், நெமிலி, பனப்பாக்கம், தக்கோலம், திமிரி, விளாப்பாக்கம், கலவை மற்றும் அம்மூர் ஆகிய பேரூராட்சிகளில் 1,392 குடிநீர் திட்டப் பணிகள் 75.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மகளிரின் பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், 7,557 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 756.50 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு மாண்புமிகு அம்மாவின் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அம்மா இருசக்கர வாகன வழங்கும் திட்டத்தின் கீழ் 1,868 பணிபுரியும் மகளிருக்கு 4.65 கோடி ரூபாய் மானியத்தில் இரு சக்கர வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தொழில் நகரமாக விளங்கும் ராணிப்பேட்டையில், மேலும் புதிய தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதிக அளவில் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொள்ளும் என்பதை இங்கே கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு நிர்வாக வசதிக்காக புதிய மாவட்டங்களை உருவாக்கியது மட்டுல்லாமல், அரசின் ஒவ்வொரு துறையிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகிறது. அவற்றில் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்த சாதனைகள் சிலவற்றை இங்கே சொல்லக்கொள்ள விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு கூட்டங்களிலும், ஊடகத்திலும் இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை, மக்களுக்கு இந்த ஆட்சியின் மூலம் எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அதனால் தான் இவ்வளவு புள்ளிவிவரங்களையும் உங்களிடம் நான் எடுத்து வைக்கின்றேன். அரசின் சாதனைகளை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலும், அம்மாவின் மறைவிற்கு பின், அம்மாவின் அரசு தொடர்ந்து செயல்படுத்திய திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12–ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக் கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளது. அனைத்துத் துறைகளைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு பெற்றத் துறை கல்வித் துறை தான். ஒரு மாநிலம் கல்வி வளர்ச்சியில் சிறந்தால் மற்ற அனைத்து வளங்களும் தானாகவே ஏற்படும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித் துறையில் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளி செல்லாக் குழந்தைகள் எண்ணிக்கையும், இடைநிற்றல் விகிதமும் பெருமளவில் குறைந்துள்ளது என்பதை இங்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘‘கல்லூரிகளில் 50 சதவீதத்தினருக்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கமாகும்’’ என்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தான் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழ்நாட்டில் 65 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கல்லூரிகளை துவக்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசும்,

புதிதாக 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றது. இதன் காரணமாக, தமிழகத்தில் உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 49 ஆக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்கும்பொழுது உயர்கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 34 சதவிகிதமாக இருந்தது, தற்பொழுது, அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகள், அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாக உயர்கல்விக் கற்பவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது என்று பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக, அவர்கள் நல்ல உடல் நலத்தோடு, ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டிலுள்ள 12,524 ஊராட்சிகள், 528 பேரூராட்சிகளில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் என்ற அற்புதமான திட்டம் அம்மாவின் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு 76 கோடியே 23 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் வாலிபால், கபடி, கிரிக்கெட் அல்லது கால்பந்து விளையாட்டுகளுக்கான ஆடுகளங்கள் அமைத்தல், விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், திறந்த வெளி உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல், போட்டிகள் நடத்துதல் ஆகிய பணிகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். கல்வித் துறை மட்டுமல்லாமல், அனைத்துத் துறைகளிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு சாதித்த சாதனைகள் மூலம் தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

எங்கள் அரசு இசுலாமிய பெருமக்களுக்கு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறது. மத நல்லிணக்கத்தில் நாட்டுக்கே உதாரணமாக விளங்கும் தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமியப் பெருமக்கள் பயனடையும் வகையில், ஹஜ் புனிதப் பயணத்திற்கான மானியத்தை மத்திய அரசு நிறுத்தினாலும், அம்மா இருந்தபொழுது தொடர்ந்து

வழங்கியதைப் போல, அம்மாவின் அரசும் ஆண்டுதோறும் 6 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது. ஹஜ் குழுவிற்கான நிர்வாக மானியத்தை 30 லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 3 ஆயிரத்திற்கும் அதிகமான பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி தயாரிக்க 5,145 மெட்ரிக் டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு தேவைப்படும் சந்தனக் கட்டைகளை அரசே ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. மாவட்ட காஜிக்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களின் மாதாந்திர ஓய்வூதியம் 1,500 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் வஃபு நிறுவனங்களில் பழுது பார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 3 கோடி ரூபாய் தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டு உள்ளது. 2011 முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் சிறுபான்மையின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தமிழ்நாடு சிறுபான்மையின பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 215.22 கோடி ரூபாய் குறைந்த வட்டியில் கல்விக் கடன், தனி நபர் மற்றும் சிறுகடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது போன்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு சார்பில், இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 34.80 கோடி ரூபாய் மதிப்பிலான 152 பணிகள் உட்பட 62 கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 171 பணிகளை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக திறந்து வைத்துள்ளேன். ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 13 கோடி ரூபாய் மதிப்பிலான 35 பணிகள் உட்பட மொத்தம் 14 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள 37 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

அதே போல, 8,688 பயனாளிகளுக்கு 89.73 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஒரே கட்டத்தில் வழங்கி உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலனுக்காக பாடுபடுவது போல் நடித்துக் கொண்டிருக்கும் சுயநல எண்ணம் கொண்ட சிலர், மாண்புமிகு அம்மா அரசின் இந்த சாதனைகளைக் கண்டு அஞ்சுகிறார்கள். அரசின் சாதனைகளை மறைத்து, தாங்கள்தான் உண்மையான மக்கள் தலைவர்கள் என்று போலியாக பேசி மக்களை நம்ப வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"நாளொரு மேடை – பொழுதொரு நடிப்பு
அவன்பேர் மனிதனல்ல,
நாவில் ஒன்று நினைவில் ஒன்று–
அதன்பேர் உள்ளமல்ல" என்ற பாடலை இங்கே நினைவுகூற விரும்புகிறேன். அதுபோல் மக்களுக்கு நன்மை செய்ய துடிப்பது போல் நடிப்பவர்களின் சுயரூபம் மக்களுக்கு ஒரு நாள் கண்டிப்பாகத் தெரிய வரும். அன்று மக்கள் அவர்களைத் தெரிந்து கொண்டு தக்க பாடம் புகட்டுவார்கள். இது தான் சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவுகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

விக்கிரவாண்டி, நாங்குநேரி சட்டமன்ற தொகுதிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினிடமும், காங்கிரஸினிடமும் இருந்தன. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபொழுது பொய்யான வாக்குறுதிகளை வாரி இறைத்தும், நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்தும், தமிழகத்தில் 38 இடங்களிலும், பாண்டிச்சேரியில் 1 இடத்திலும் என 39 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டணி வெற்றி பெற்றது. பின்னர், நிறுத்தி வைக்கப்பட்ட வேலூர் நாடாளுமன்றத் தேர்தல் மத்திய தேர்தல் ஆணையத்தால் மீண்டும் நடத்தப்பட்டது. அப்பொழுது, எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் நாங்கள் கிட்டத்தட்ட 39 இடங்களில் இலட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம், அதைவிடக் கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று தலைக்கனத்துடன் பேசினார். ஆனால், பொய் வாக்குறுதி கொடுத்து வெற்றி பெற்று விட்டீர்கள், உங்களால் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது, எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்று எண்ணி, தள்ளி வைக்கப்பட்ட வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் தக்க பாடத்தை புகட்டியவர்கள் இந்த ஒன்றுபட்ட வேலூர் மாவட்ட மக்கள்.

வேலூர் நாடாளுமன்றத்தில் இருந்த 6 சட்டமன்றத் தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், 70 நாட்களில், 3 சட்டமன்றத் தொகுதிகளில் அதிக வாக்கு பெற்று சாதனை படைத்தது. மீதமுள்ள 3 சட்டமன்றத் தொகுதிகளில் தான் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகளை பெற்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது நடைபெற்ற குடியாத்தம் சட்டமன்ற இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏறக்குறைய 28,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பின்னர், வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில் குடியாத்தம் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 12,000 வாக்குகள் அதிகம் பெற்றது. 70 நாட்களில் மக்களிடம் மன மாற்றம் ஏற்பட்டு, உண்மையைப் பேசிய காரணத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்தார்கள். பொய் பேசிய காரணத்தினால் மிகப்பெரிய தண்டனையை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொடுத்தார்கள்.

2016—ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபொழுது அணைக்கட்டுத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. வேலூர் நாடாளுமன்றத் தேர்தலில்போது நடைபெற்ற பொழுது, அதில் உள்ளடங்கியிருக்கின்ற அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட இரட்டை இலை 9020 வாக்குகளை அதிகம் பெற்றது. இனி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாழ்வில்லை, திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் கூட்டணிக் கட்சித் தலைவர்களும், பொய் பேசி, செயல்படுத்த முடியாத திட்டங்களைச் சொல்லி, மக்களை ஏமாற்றி பெற்ற வெற்றி என்று அன்றைய தினமே மக்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதன்பின்னர் நடைபெற்ற விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகமும், நாங்குநேரி சட்டமன்ற இடைத் தேர்தலில் காங்கிரசும் போட்டியிட்டதில், விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் 45,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். காங்கிரஸ் கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில், கூட்டணி பலம் குறைவாக இருந்தாலும்,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர், கூட்டணி அமைத்து போட்டியிட்டதன் விளைவாக 34,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். வட, தென் மாவட்டங்களில் நாங்கள் வெற்றி பெற்றோம். 2021–ஆம் ஆண்டு வரவிருக்கிற சட்டமன்றத் தேர்தலிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், கூட்டணிக் கட்சிகளும் மிகப்பெரிய வெற்றி பெறும்.

திரு.ஸ்டாலின் அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாது என்று கூறி வருகிறார். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றபொழுது, உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்குண்டான அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டதென்று மாநில தேர்தல் ஆணையம் தெளிவாகத் தெரியப்படுத்திவிட்டது. இதுதொடர்பாக, இன்றையதினம் சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறது. ஆனால் வேண்டுமென்றே, திட்டமிட்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்களும், அவர்களுடைய கூட்டடணிக் கட்சியினரும் ஒன்றாக இணைந்து தவறான, பொய்யான செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள், அது உண்மையல்ல, மக்களைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, மாநிலத் தேர்தல் ஆணையம் உள்ளாட்சித் தேர்தலை அறிவிக்கின்ற நிலையில் இருக்கின்றார்கள் என்பதை பத்திரிகைகள் வாயிலாக நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மாநில தேர்தல் ஆணையம் நிச்சயமாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் என்று நம்புகிறோம். உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் மாநிலத் தேர்தல் ஆணையம் தன்னாட்சி பெற்ற அமைப்பு. நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி உள்ளாட்சித் தேர்தலை நடத்துகின்றார்கள். ஆனால், திரு.ஸ்டாலின் வேண்டுமென்றே திட்டமிட்டு, நீதிமன்றத்தை நாடப் பார்க்கின்றார். கொள்ளைப்புறத்தின் வழியாக இந்தத் தேர்தலை நிறுத்தப் பார்க்கின்றார். 2016–லும் இதுபோலத் தான். மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபொழுது, தேர்தல் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டது. அப்பொழுது, அதில் இட ஒதுக்கீடு சரியில்லை என்று கூறி நீதிமன்றம் சென்று அந்த நேரத்தில் அதற்கு இடையூறாக இருந்ததும் திராவிட முன்னேற்றக் கழகம் தான். ஆனால், வெளியில் பேசும் பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தேர்தலைக் கண்டு அஞ்சுவதாகச்

சொல்கிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தக் காலத்திலும், எந்தத் தேர்தலையும் கண்டு அஞ்சிய வரலாறு கிடையாது. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காலங்களிலும் எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்ற ஒரே கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கட்சி. இதனை பல காலகட்டங்களில் நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலைச் சந்திக்க பயப்படுகிறார். மற்றவர்களைத் தூண்டிவிட்டு நீதிமன்றம் சென்று, ஏதாவது குட்டையைக் குழப்பி இந்தத் தேர்தலை நிறுத்த முயற்சிக்கின்றார்.

முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் நேரடித் தேர்தலை மறைமுகத் தேர்தலாக மாற்றிவிட்டார்கள் என்றும் சொல்கிறார். **1996–**ஆம் ஆண்டு திரு.ஸ்டாலின் அவர்களுக்காக நேரடித் தேர்தலைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம் தான். மீண்டும் **2006–**ல் திரு.ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது நேரடித் தேர்தல் மறைமுகத் தேர்தலாக நடத்தப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்து உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. அவர்கள் கொண்டு வந்தால் அது சரி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்தால் அது தவறு. இது எந்தவிதத்தில் சரி? மக்கள் வாக்களித்து, தேர்ந்தெடுத்த கவுன்சிலர்கள் தான் பேரூராட்சி, நகராட்சித் தலைவர்களையும், மேயர்களையும் தேர்ந்தெடுக்கின்றார்கள். நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்? எப்படித் தேர்தல் வந்தாலும் எதிர்கொள்வோம் என்று சவால் விட்டுக் கொண்டிருந்தீர்களே? அந்தச் சவால் இப்பொழுது என்னவாயிற்று? மாநிலத் தேர்தல் ஆணையம் எப்பொழுது தேர்தலைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்கொள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தயாராகவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். அம்மா அரசைப் பொறுத்தவரைக்கும் மக்கள் பணி செய்வது தான் எங்கள் கடமை.

இன்று புதிதாக தொடங்கப்பட்டுள்ள இராணிப்பேட்டை மாவட்டம் ஏற்கனவே தொழில்கள் நிறைந்த மாவட்டமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கான

நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரக்கூடிய மாவட்டமாக இராணிப்பேட்டை மாவட்டம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, 2019 ஜனவரி மாதம் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை சென்னையிலே நடத்தி 304 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டு, 3 லட்சத்து 431 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறது. இந்தத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாக ஈர்க்கப்பட்ட முதலீடுகள் வருகின்றபொழுது, தமிழகத்தில் சுமார் 10 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும். வருகிற 30–ஆம் தேதி கூட 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட விருக்கின்றோம் மற்றும் 3 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட இருக்கின்றோம். வேண்டுமென்றே திட்டமிட்டு எதிர்க்கட்சித் தலைவரும், அவருடைய கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற கட்சித் தலைவர்களெல்லாம், நீங்கள் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தினீர்களே, எவ்வளவு தொழிலை ஈர்த்தீர்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள் வெளிப்படையாக சொல்லிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு தொழில் முதலீட்டாளர்கள் எல்லாம் தமிழ்நாட்டை நாடிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய, பெரிய தொழில் தமிழகத்தில் வருவதற்கு உரிய நடவடிக்கையை எங்களுடைய அரசு எடுத்து வருகிறது. அந்த சாதனைகளைத் தான் நாங்கள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வெற்றி கண்டார்கள். அதன் தொடர்ச்சியாக, அம்மாவின் வழியிலே வந்த அம்மாவின் அரசு சென்னையிலே தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வெற்றி கண்டிருக்கிறது. இதன் மூலம், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாகும், தமிழகம் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும். இந்தியாவிலேயே முதன்மை தொழில் மாநிலமாக உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் அரசு அம்மாவினுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டுவோம்.

தமிழகம் முழுவதும் குடிமாராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள், குளங்கள், குட்டைகளை சீர்செய்து கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ரூபாய் 1250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆங்காங்கே இருக்கும் ஏரிகள், குளங்கள், குட்டைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேபோல, பொதுப்பணித் துறையின் கீழ்

வருகின்ற ஏரிகளும் தூர்வாரப்படுகின்றன. 2016–2017–ல் ரூ.100 கோடியும், 2017–2018–ல் சுமார் ரூ.328 கோடியும் குடிமராமத்துத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018–2019–ல் ரூ.500 கோடி இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஏரிகள், குளங்கள் அனைத்தும் தூர்வாருவதற்கான நடவடிக்கை எடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. முழுக்க முழுக்க விவசாயப் பங்களிப்புடன் இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் பல ஆண்டுகாலமாக தூர்வாரப்படாமல் இருந்தது. அதனால் மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாக கடலில் கலந்து வீணாகின்றது. அப்படி மழைக்காலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக இந்த குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகளை பயன்படுத்தி செய்து கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வேளாண் மக்களும், பெருமக்களும் வரவேற்கின்றார்கள். பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் சேமித்து வைக்கப்பட்டு வறட்சியான காலங்களில் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்கின்றது.

அதேபோல, ஓடை மற்றும் நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த 2 ஆண்டுகளில் ரூ.600 கோடி செலவில் தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. எங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டவேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றார்களோ, அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, எங்களுடைய அரசு, நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி, அதற்காக ஓய்வு பெற்ற 2 தலைமைப் பொறியாளர்கள், 3 கண்காணிப்புப் பொறியாளர்களை நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் சென்று, எங்கெங்ல்லாம் நீர் வீணாகின்றது என்பதை கணக்கிட்டு, ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்து, அதன் மூலமாக தடுப்பணைகள் கட்டுகின்ற நிகழ்வும் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவின் அரசு. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளின் பயிர் சேதம் அடைந்துவிட்டால் அல்லது வறட்சியால் பாதிக்கப்பட்டு விட்டால், அந்த விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, இரண்டாண்டுகளில் ரூ.7,000 கோடி இழப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. இந்தியாவிலேயே, பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு இழப்பீட்டைப் பெற்றுத் தந்த முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு, ஒரே நேரத்தில் 6 மருத்துவக் கல்லூரிகளை நமக்கு வழங்கியது. மேலும், 3 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமரிடத்தில் கோரிக்கை வைத்தோம். அதையும் ஏற்று, நேற்றைய தினம், 3 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கி, ஒரே ஆண்டில், மொத்தம் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை துவக்கிய வரலாற்றுச் சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

மத்திய அரசுக்கு நீங்கள் அடிமையாக இருக்கின்றீர்கள், மத்திய அரசுக்கு கூஜா தூக்குகின்றீர்கள் என்று திரு.ஸ்டாலின் பேசுகிறார். காங்கிரஸ் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தது. அந்த காலகட்டத்தில் தமிழகத்திற்கு எத்தனை மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்தீர்கள் ? எத்தனை திட்டத்தை கொண்டு வந்தீர்கள் ? அதற்காக எவ்வளவு நிதியைப் பெற்றீர்கள் ? ஒன்றுமே கிடையாது. அவரது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் வலம் வந்தார்கள், அதிகாரத்தைப் பெற்றார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அப்படியல்ல. தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை நன்கு உணர்ந்து, மத்திய அரசிடமிருந்து எதைப் பெற முடியுமோ அதை கேட்டுப் பெற்று இன்றைக்கு தமிழ்நாட்டை வளம் பெறுகின்ற மாநிலமாக உருவாக்குவதற்கும் நாங்கள் இரவு, பகல் பாராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அதற்கு எங்களுடைய

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் துணை நிற்கின்றார்கள். ஆகவே, ஒரே நேரத்தில் 9 மருத்துவக் கல்லூரிகளைப் பெற்றதன் மூலம், தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு 1350 மாணவர்கள் புதிதாக மருத்துவப் படிப்பு படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு, அம்மாவினுடைய அரசு. ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் இணக்கமாக இருந்தால் தான், தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்களைப் பெறமுடியும். எனவே தமிழகத்திற்கு தேவையான திட்டங்கள், நிதிகளைப் பெறுவதற்கு நாங்கள் மத்தியிலே ஒரு இணக்கான உறவு வைத்திருக்கின்றோம். ஆனால் நீங்கள் ஐந்தாண்டு காலம் பாரதீய ஜனதாவோடு மத்தியிலே ஆட்சிப் பொறுப்பில் இருந்தீர்கள். அப்பொழுதெல்லாம், பாரதீய ஜனதா கட்சி நல்ல கட்சி என்று வர்ணித்தீர்கள், புகழ் பாடினீர்கள். இன்னும் சொல்லப்போனால், முரசொலி மாறன் ஓராண்டுகாலம் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வந்தார். இலாகா இல்லாத மந்திரியாக, பாரதீய ஜனதா அரசு கொடுத்திருந்தது. அப்பொழுதெல்லாம் பாரதீய ஜனதா கட்சி, சிறந்த கட்சி என்று புகழ் பாடினீர்கள். ஆனால் இன்று என்ன ?

நாங்கள் இப்பொழுதுதான், நாடாளுமன்றத் தேர்தலில் தான் இந்தக் கூட்டணியில் அங்கம் வைத்தோம். நாங்கள் கூட்டணி வைத்து ஏறக்குறைய சுமார் 5 மாத காலம் தான் ஆகிறது. அந்த 5 மாத காலத்தில் இவ்வளவு திட்டங்களை நாங்கள் பெற்றிருக்கின்றோம். மதுரையில், எய்ம்ஸ் மருத்தவமனையைக் கொண்டு வந்திருக்கின்றோம், தமிழகத்தில் 9 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, சென்னையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி வேண்டும் என்று கேட்டிருக்கின்றோம். அதுவும் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு புதிய சாலைகளுக்கு மத்திய அரசு அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு மாண்புமிகு அம்மா வழியிலே நடந்து கொண்டிருக்கும் எங்களுடைய அரசு மத்திய அரசோடு இணக்கமாக இருந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் இருக்கின்றோம். ஆனால், நீங்கள் மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருக்கின்றபொழுது மத்தியில் காங்கிரஸுடனும் அங்கம் வகித்தீர்கள், பாரதீய ஜனதாவுடனும் அங்கம்

வகித்தீர்கள். காங்கிரஸிலும் அமைச்சராக இருந்தீர்கள், பாரதீய ஜனதாவிலும் ஆட்சியில் இடம் பெற்றிருந்தீர்கள். பச்சோந்தி அடிக்கடி நிறம் மாறும். ஆனால் பச்சோந்தி கூட கொஞ்சம் நேரம் கழித்து தான் நிறம் மாறும். ஆனால், திமுக உடனுக்குடன் மாறும், நிறம் மாறும், கொள்கையற்ற கட்சி. நீங்கள் பேசுவதற்கு என்ன தகுதியிருக்கிறது ? எங்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டின் நலன், தமிழ்நாட்டு மக்கள் தான் முக்கியம். தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை கிடைப்பதற்காக போராடுவோம், வாதாடுவோம், நிதியைப் பெறுவோம், நல்லது செய்வோம். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டிச் சென்றிருக்கிறார்கள். அந்த வழியைப் பின்பற்றி, நாங்கள் இந்த நாட்டு மக்களுக்காக எங்களை அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேடையிலே வீற்றிருக்கும் அமைச்சர் பெருமக்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டதன் விளைவாக, துறை துறை வாரியாக அதிக விருதுகளைப் பெற்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பெற்றிருக்கின்றது. மின் துறை, போக்குவரத்துத் துறை, சமூக நலத்துறை, உள்ளாட்சித் துறை, கல்வித் துறை போன்றவற்றில் தேசிய விருதுகளை பெற்றிருக்கின்றோம். வேளாண்மைத் துறையில் தொடர்ந்து கிருஷி கர்மான் விருதைப் பெற்றிருக்கின்றோம். நிர்வாகம் சிறப்பாக இருக்கின்ற காரணத்தினால் தான் இவ்வளவு விருதுகளைப் பெற்று இருக்கின்றோம் என்பதை தெரிவிக்க விழைகின்றேன்.

நீண்டகாலமாக அமைச்சராக இருந்த திரு. துரைமுருகன் மாவட்டத்தை பிரிப்பதினால் எந்தப் பயன் கிடைக்கப் போகிறது ? ஒன்றும் கிடைக்காது என்று சொன்னார். அப்படி கிடைக்கவில்லையென்றால், மறைந்த முன்னாள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதலமைச்சராக இருந்த காலத்தில், பல்வேறு மாவட்டங்களை பிரித்து இருக்கிறார். அப்படியென்றால், அதெல்லாம் தேவையில்லையா ? நீங்கள் பிரித்தால் சரி, நாங்கள் பிரித்தால் தவறா ? புதிய மாவட்டங்களை உருவாக்குவதினால், பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை எளிதில் அணுகி, தங்களுடைய பிரச்சினைகளுக்கு நிவாரணம் காணமுடியும்.

முதலமைச்சர் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ் மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்க அம்மாவின் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய **9,72,216** மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் பல மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எனவே, மக்களை அணுகி அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற ஒரே அரசு அம்மாவின் அரசு.

தமிழ்நாடு முழுவதும் 5 லட்சம் முதியோர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படும். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை பெறுவதற்கு அனுமதிக்கப்பட்ட தொகையை 2 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்தியது அம்மாவின் அரசு.

புதிதாக உருவாக்கப்பட்ட இராணிப்பேட்டை மாவட்டம் சீரும், சிறப்போடும், தொழில்வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக வேண்டும் என்று வாழ்த்தி, சில அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நெமிலி வட்டம், வேகாமங்கலம் அருகே பாலாற்றின் குறுக்கே 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கப்படும். இதன் மூலம் இதனைச் சுற்றியுள்ள வேகாமங்கலம், மாமண்டூர், பனமுகை மற்றும் அரியூர் கிராமங்கள் பயன்பெறும்.

அரக்கோணம் வட்டம், அருகில்பாடி கிராமம் அருகே கல்லாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், வாலாஜா வட்டம், பல்லேரி அருகே பொன்னை ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், வாலாஜா வட்டம், பூட்டுத்தாக்கு கிராமம் அருகே பாலாற்றின் குறுக்கே தரைமட்ட தடுப்புச் சுவர் ஆகியவை அமைக்க ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, சோளிங்கர் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மேல்விஷாரம் ஆரம்ப சுகாதார நிலையம் **1.60** கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

வாலாஜா வட்டம், சிப்காட் பகுதி–**3** விரிவாக்கப் பகுதியில் **23** கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாடு செய்யப்படும்.

இராணிப்பேட்டையில் தனியார் பங்களிப்புடன் கூடிய **(PPP)** மேம்படுத்தப்பட்ட பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

இந்த மாவட்டம் சீரும், சிறப்போடும் விளங்குவதற்கு அம்மாவினுடைய அரசு துணை நிற்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மாவட்டம் உதயமாவதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு மாவட்ட அமைச்சர் பெருமக்கள், அவர்களுக்கு துணை நின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அதிகாரிகள், மாவட்டத்தில் பணிபுரிகின்ற அலுவலர்கள், வருகை தந்துள்ள அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**